


திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் வேப்பம்பட்டில் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சரும், மாவட்ட செயலாருமான ஆவடி சா.மு.நாசர் 18 தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தரும் கழக தலைவர் நிகழ்ச்சி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, கே.ஜே.ரமேஷ், மா.இராஜி, காயத்ரி ஸ்ரீதரன், தொழுவூர் பா.நரேஷ்குமார், விமல் வர்ஷன், ரமேஷ், ராஜா, மகேஸ்வரி பாலவிநாயகம், குட்டி (எ) பக்தவச்சலு, திலீப்ராஜ், இ.என்.சேகர் உள்பட பலர் உள்ளனர்.

## ஆதிதிராவிட மக்களுக்காக சிறப்பு நிதி முதல்வர் வழங்கி இருக்கிறார்!

# ரூ.164 கோடியில் 164 சமுதாயக் கூடங்கள்!

### சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதில்!



சென்னை, ஏப்.12-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பொன்னேரி தொகுதி உறுப்பினர் துரை. சந்திரசேகர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலளிக்கையில், ஆதி திராவிட மக்களுக்காக சிறப்பு நிதி முதலமைச்சர் வழங்கி இருக்கிறார் என்றும், ரூ. 164 கோடியில் 164 சமுதாயக் கூடங்கள் கட்ட நடவடிக்கை எடுத்து பாதி கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பாதி கட்டப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

**துரை.சந்திரசேகர்:** பொன் ரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், திருநிலை ஊராட்சி, கொடிப்பள்ளம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன்:** தங்களின் அனுமதியோடு, திருத்திய விடையை அளிக்கிறேன். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், திருநிலை ஊராட்சி, கொடிப்பள்ளம் கிராமத்தில் புல எண் 32ல் அரசு புறம்போக்கு நிலத்தில் சமுதாயக்கூடம் அமைக்க போதிய இடவசதி உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து, துறையின் நிதிநிலைமைக்கேற்ப சமுதாயக் கூடம் அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும்.

**துரை. சந்திரசேகர்:** பொன்னேரி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் கடந்த நான்கு ஆண்டுகளில் 80 சதவிகிதப் பணிகள் நிறைவுப்பெற்று, நிறைவாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். அந்த 20 சதவிகிதப் பணிகளாக சில இடங்களில் சமுதாயக் கூடம் கட்டவேண்டும் என்று வாக்குறுதி கொடுத்து இருக்கிறோம். அமைச்சர் அவர்கள் சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஞாயிறு, வழுதிகை மேடு, பெரிய முல்லைவாயில், அருமந்தை, திருமுல்லை ஆகிய ஊராட்சிகளுக்கு பொதுவாக ஒரு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன்:** ஏற்கெனவே நம்முடைய உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, பொன்னேரி தொகுதி, திருப்பாளையம் ஊராட்சி, செஞ்சியம்மன் நகர் இருளர் காலனிப் பகுதியில் ரூபாய் 43.85 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. இதுமட்டுமில்லாமல் திருவூர் கிராமத்தில் மானட் நகரில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இது இல்லாமல் உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த கிராமத்தில் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஞாயிறு கிராமத்தில், ஏற்கெனவே சமுதாயக் கூடம் நல்ல நிலையில் அடிப்படை வசதியுடன் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் பெரிய முல்லைவாயில் கிராமத்தில் உள்ள சமுதாயக் கூடமும் நல்ல நிலையில் உள்ளது. ஆனால் இருப்பினும் இடவசதி இருந்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**துரை. சந்திரசேகர்:** அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற, சமுதாயக் கூடங்கள் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அது பயன்படுத்த இயலாத நிலைமையில்தான் இருக்கிறது.

ஆகவே, விச்சூர், வெள்ளிவாயல் பகுதியில், துறை மூலம் நீங்கள் 60% நிதியைக் கொடுப்பதாக இருந்தால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 40% நிதியை ஒதுக்கித் தருவதாக ஆலோசனை சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வாய்ப்பு இருந்தால், அமைச்சர் அவர்கள், தங்கள் மூலமாக அறிவிப்பார்களா?

**அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன்:** உறுப்பினர் அவர்கள் எந்த நிதியும் கொடுக்க வேண்டாம். முதலமைச்சர் அவர்கள், ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ஏற்கெனவே சிறப்பு நிதி வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில், ரூ.164 கோடி மதிப்பீட்டில், 164 சமுதாயக் கூடங்கள் பாதி கட்டப்பட்டுள்ளன. மீதி கட்டப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

அதனால், நீங்கள் எந்த இடத்தில் சமுதாயக் கூடம் கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்களோ, அதில் ஒரு சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகள், கிட்டத்தட்ட 7,500 சதுர அடி நிலம் இருக்க வேண்டும்; இல்லையென்றால், சுமார் 5,000 மக்கள் அங்கே இருக்க வேண்டும்; அதில் பெரும்பான்மையான மக்கள் ஆதி திராவிட மக்களாக இருக்க வேண்டும்; 5 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு எந்த சமுதாயக் கூடமும் இருக்கக்கூடாது, இந்த மூன்று நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், தங்களுக்கு வருங்காலத்தில் நிதிநிமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.04.2025) திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு74க்குட்பட்ட பெரம்பூர் சேமாத்தம்மன் திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.52 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் மண்டபம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியில்

# புதியதாக மீன் மார்க்கெட் அமைக்கப்பட வேண்டும்!

### சட்டப்பேரவையில் ஆ.கிருஷ்ணசாமி வலியுறுத்தல்!



சென்னை, ஏப்.12-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**ஆ.கிருஷ்ணசாமி:** பூந்தமல்லி நகரத்தில் அசைவ பிரியர்கள் அதிகமாக வாழ்கிற நகராட்சி. அந்த நகராட்சியில் ஒரு புறம்போக்கு இடத்தில் தொடர்ந்து கால ங்காலமாக மீன் விற்றுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதியிலே இப்போது Metro rail நிறுவனம் அந்த இடத்தை ஆக்கிரமித்து railway station அமைத்திருக்கிறார்கள். அதனால் மீன் விற்பதற்கு இடம் இல்லாமல் அந்த மீன் விற்பனை யாளர்கள் தவிக்கிறார்கள். அதேபோல கறிக்கடையும் சாலையோரங்களிலே விற்று அந்த கறி அசுத்தமாக ஆகிறது. எனவே, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே ஒரு மீன் marketம், கறி விற்பதற்கான ஒரு marketம் அமைத்துத் தருவார்களா?

**அமைச்சர் கே.என். நேரு:** நகராட்சிப் பகுதிகள் மிகவும் சுகாதாரமாக இருக்க வேண்டுமென்பதிலே அரசு நிறைய முயற்சிகள் எடுத்திருக்கிறது. குறிப்பாக, அனைத்து உறுப்பி னர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அனைத்து இடங்களிலுமே நாய்களுக்கான கருத்தடை மையங்கள் அமைப்பதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று slaughter houses அனைத்து இடங்களிலும் நவீன முறையில் இருக்க வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு இதனால் எந்தவிதமான தொற்று நோயும் ஏற்படக் கூடாது என்ற நோக்கத்திற்கேற்ப, இந்தாண்டு 7, 8 இடங்களில் slaughter houses புதிதாக அமைக்கப்பட்டும், பழைய இடங்களில் அவற்றை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்றக்கொண்டிருக்கின்றன. எனவே, பூந்தமல்லிப் பகுதியில் இடம் இருக்குமேயானால், அது போன்ற slaughter house அமைப்பதற்கு, இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி –

# போரூர் ஏரியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை!

### சட்டப் பேரவையில் காரம்பாக்கம் கணபதி நன்றி!



சென்னை, ஏப்.12-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது மதுரவாயல் தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பேசுகையில் போரூர் ஏரியில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்துள்ளமைக்கு முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இதுகுறித்து விவாதம் வருமாறு:-

**காரம்பாக்கம் க. கணபதி:** போரூர் ஏரியை ஆழப்படுத்தி கரைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர்: துரைமுருகன்,** மதுரவாயல் தொகுதியில் அமைந்துள்ள போரூர் ஏரியை ஆழப்படுத்தி கரைகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**காரம்பாக்கம் க. கணபதி:** முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போரூர் ஏரியானது, போரூர் கிராமம், புல எண் 370ல், 151 ஏக்கர் பரப்பில், அதன் கரை நீளம் 1.61 கிலோ மீட்டர் நீளமும் கொண்டது. காரம்பாக்கம் கிராமம், புல எண் 151ல் 20.97 ஏக்கர் பரப்பில் அதன் கரை நீளம் 1.4 கிலோ மீட்டர் ஆகும். ஆலந்தூர் தொகுதியில் மீதமுள்ள ஏரியின் பரப்பளவையும் சேர்த்தால் ஏறக்குறைய 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி ஆகும். போரூர் ஏரியின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆழப்படுத்தி, சுற்றுச்சுவர் அமைத்து கரைகளில் நடைபாதை பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் பலமுறை கடிதம் வாயிலாகவும், நேரடியாகவும் மனு கொடுத்திருக்கிறேன். ஆகவே, அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தருவாரா ?

**அமைச்சர் துரைமுருகன்:** போரூர் ஏரியை தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி, சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 63 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் அது எடுத்துக்கொள்ளப்படும்.

காரம்பாக்கம் க. கணபதி: அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலந்தூர் மற்றும் மதுரவாயல் தொகுதிகளில் அமைந்துள்ள ஆலப்பாக்கம் ஏரி அதிக பரப்பளவு கொண்டதாக உள்ளது. ஆலப்பாக்கம் ஏரியை இதேபோன்று, அழகுப்படுத்தி தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கொள்கைக் குறிப்பின் கையேட்டை நான் இப்போது பார்த்தேன். போரூர் ஏரியில் சீரமைப்பு பணிகள் தொடங்கப்பட உள்ளதாக அந்த கையேட்டில் இருக்கிறது. ஆகவே, நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## ச.சங்கர்கணேஷ் எம்.சி.நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மதுரவாயல் 151வது வார்டில் தண்ணீர் பந்தல்!

### ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா முன்னிலையில் காரம்பாக்கம் கணபதி திறந்து வைக்கிறார்!

சென்னை ஏப்:12

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியம் வழிகாட்டுதலின் படி, சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு 151,பூத்தப்பேடு பிரதான சாலையில் அமைந்துள்ள ராதா பேக்கரிக்கு எதிரில் மற்றும் லட்சுமி நகர் 40 அடி சாலை ஆர்ச்சிக்கு அருகில் (2 இடங்களில்) இன்று (12.04.2025 சனிக்கிழமை) காலை 8.30 மணியளவில் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகம்பா க்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா முன்னிலையில் கோடை வெயிலில் பொதுமக்களின் தாகத்தை தணிக்க இளநீர்,பழரசம், வெள்ளரி பிஞ்சு, நுங்கு,தர்பூசணி பழம் மற்றும் கிர்ணி பழம் ஆகியவற்றை வழங்கி நீர் மற்றும் மோர் பந்தலினை திறந்து வைக்க உள்ளார்கள்.

ஆகவே இந்நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், 151வது வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ், மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன் மற்றும் ஆர்.சேகர்,151வது வட்ட கழக நிர்வாகிகள் செ.இராமையா, எம்.சிவா,கி.முரளி, கு.விமலா சேகர், வி.பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், ஆர். முரளிகிருஷ்ணன்,ப.சரவணன், மோ.சுந்தர்,க.குமார், மு.மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.தனசேகர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பளார் பி.கே.சண்முகம், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. செந்தில்குமார்,பகுதி அமைப்பாளர்கள் ப. ரகு,எம்.லோகேந்திர பாபு, ஏ.பிரசாந்த்,

இலக்கிய அணி துணை அமைப்பாளர் இரா. ராஜேஷ், மதுரவாயல் தெற்கு பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் என்.துரை,வளசை ஆர்.செந்தில், ஆட்டோ கிருஷ்ணன், ஆர்.மணிமாறன், வழக்கறிஞர் ஏ.சுரேஷ்குமார், வழக்கறிஞர் நா.முத்தழகன், வழக்கறிஞர் பிரசாந்த்,எம். நாகராஜ்,வி.பாலு, ஜெ.விஜயன், கே.பி.உதயன், வழக்கறிஞர் பிரசாந்த்,கிறிஸ்டி, பெர்ணான்டோ, ரு. காவேரி, பி.பரிமளா, ஆர். கருணாகரன், ச.சுதாசங்கர் கணேஷ், ஏ.பானுமதி, செ.ராஜா, பி.இளங்கோ, எல்.ஐ.சி.நாகராஜ், கே.பாஸ்கர், எஸ்.அன்புசெல்வி, ஏ. சுசைராஜ், எஸ்.சுந்தர மூர்த்தி, ஏ.கணேசன், எம். ஜி.ராமதாஸ் சின்னப் போரூர் கே.சேகர், ஏ.மதன கோபால், ஜெ.குப்பன், வி. செல்லபாண்டி, கே.வெங்கடேசன், மு.தங்கராஜ்,க. தீபன், எம்.ஜார்ஜ்முல்லர், செ.சதீஸ்,எல்.சீனு, தி. கோவிந்தராஜன், கி.செல்வம், ப.மணிகண்டன், ஏ. வினோத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் – சட்டமேதை

# டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள் - சிலைக்கு மரியாதை!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மாலை அணிவிக்கிறார்!

சென்னை, ஏப். 12 -

புழல் 24-வது வட்டக் கழகம் சார்பில் சட்டமேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புழல் ஜி.என்.டி. ரோட்டில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது என வட்டக் கழகச் செயலாளர் கே.பி. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கைவருமாறு:

இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 14.4 .2025 - திங்கட்கிழமை காலை 8.30 மணி அளவில் வட்ட செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் வட்ட நிர்வாகிகள் சி.ஜே.ரவி, பி. கென்னடி, என்.எழில்ராவணன், எம். அந்தோணி, மலர்கொடி, செல்வராஜ், ஏ.ஜெயகர், பி.எஸ்.என். எல்.நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.கௌதமன், எம். உதயப்பாரி ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளார்.

இந்த நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.




பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு, சமத்துவ நாள் உறுதிமொழியினை துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சமத்துவ நாள் உறுதிமொழியினை நேற்று (11.04.2025) ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், உதவி ஆணையாளர் (பொது நிர்வாகம்) செல்வி ஆர். உமா மகேஸ்வரி மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.